# அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிக்கூற்றுக்களில் எற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் நிதி நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகளையும் காசோட்டத்தினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்த பொருள் மெய்மையாய்வின் போது பாவனைக்கு எடுக்கமுடியாது என தீர்மானிக்கப்பட்ட 05 விடயங்களின் 22 அலகுகள் நிலையான சொத்துப் பதிவேடுகளில் இருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அவற்றை விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் வகைப்படுத்தப்படாத பணம் அனுப்புதல் கணக்கில் ரூபா 219,697 தொகையும் நானாவித செம்மையாக்கல் கணக்கில் அங்கத்தவர் கடனிற்காக தீர்க்கப்படாத ரூபா 394,489 தொகையும் இணக்கம் செய்யப்படாது காணப்பட்டன.

#### 1.2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நானாவித கடன்பட்டோராகக் காண்பிக்கப்பட்ட மரணித்த மற்றும் அங்கத்துவத்தை இழந்திருந்த அங்கத்தவர்களிடமிருந்து ரூபா 1,998,062 தொகையான மீதி அறவிடவேண்டியிருந்தது. அதில் ரூபா 1,657,401 தொகை 88

அங்கத்தவர்களிடமிருந்து 1 வருடம் தொடக்கம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வழங்கப்பட்ட கடன்களிலிருந்து அறவிட வேண்டியிருந்த கடன் மீதியாகும். அதில் 73 அங்கத்தவர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 1,583,060 தொகையில் மீளாய்வாண்டின் போது எத்தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. உரிய அங்கத்தவர்களிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கோ அல்லது ஈடுசெய்வதற்கான பங்களிப்புப் பணம் அல்லது ஏனைய அறவிடக்கூடிய தொகை சங்கத்திடம் காணப்படாமையினாலும் அவர்களினது சங்கத்துடனான எந்தப் பிணைகளும் காணப்படாமையினாலும் ரூபா 1,998,062 தொகையான அறவிட வேண்டிய மீதியை அறவிடுதல் நிச்சயமற்றதாகக் காணப்பட்டது. இந்தக் கடன் வழங்கும் போது பிணைப் பொறுப்பு பெறப்படாமையினால் இந்நிலைமை ஏற்படக் காரணமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் கடன் வட்டி மற்றும் பங்களிப்புப் பணத்தை செலுத்த தவறியுள்ள 20 அங்கத்தவர்களினதும் அங்கத்துவத்தை இரத்துச் செய்வதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ள 04 உறுப்பினர்களிடமிருந்தும் 03 மாதங்கள் முதல் 01 வருடம் வரையான காலப்பகுதியிலிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் தவணைப்பணம் மற்றும் வட்டி என்பன ரூபா 622,202 ஆக இருந்தது. அதில் அங்கத்துவத்தை இரத்துச் செய்வதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ள உறுப்பினர்களிடமிருந்து செலுத்தப்படாதுள்ள கடன் தவணைப்பணம் மற்றும் வட்டி என்பவற்றின் கூட்டுத்தொகை ரூபா 189,613 ஆனமையால் அந்த அங்கத்தவர்களிடமிருந்து அறவிட வேண்டிய மொத்தக் கடன் தொகையும் அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.

(இ) 31 உறுப்பினர்களினால் 03 மாதங்கள் முதல் 01 வருடம் வரையான காலப்பகுதியிலிருந்து ரூபா 109,743 கூட்டுத்தொகையான பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விதி இல. 14 இன் கீழ் வழங்கப்பட்ட பங்களிப்புக் கடனுக்காக முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 98,307 தொகை கிடைக்க வேண்டியிருந்ததுடன் அத் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

(அ) கீழே காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு முன்னால் உள்ள சான்றுகள் இன்மையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதி செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| வகைப்படுத்தப்படாத அனுப்புதல்கள் | 530,964 | தனிப்பட்டோரது மீதிப் பட்டியல் |
| அங்கத்துவம் இழக்கப்பட்டவர்களது பங்களிப்புப் பணம் | 14,934,697 | |
| பொது வைப்புக்கள் | 311,267 | |
| சேவைகளுக்காகக் கிடைத்த முற்பணம் | 82,445 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| செலுத்த வேண்டிய கடன் | 98,106 | |
| நானாவித கடன்பட்டோர் | 846,085 | |
| அங்கத்தவர்களுக்கான கடன் | 602,183,245 | காலப்பகுப்பாய்வு |
| மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்புக்கள் | 65,985 | உடன்படிக்கைகள், வைப்புகளுக்குரிய மூல ஆவணங்கள் |
| சட்டத்தரணிகள் கட்டணமும் மதிப்பீட்டுக் கட்டணங்களும் | 75,965 | கடன் விண்ணப்பதாரர்கள் தொடர்பான விபரங்கள், காலப்பகுப்பாய்வு |
| முன்னைய வருடங்களில் சேர்க்கப்பட்ட அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த எதிர்பாராத ஒதுக்கத்தில் செலவு வைக்கப்பட்ட தொகை | 28,900 | 289 அங்கத்தவர்கள் தொடர்பான விபரம் |

(ஆ) அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் திருத்திய நியதிச்சட்டத்தின் 10(அ)(ii) ஈ பிரிவின் பிரகாரம் மரண உதவு தொகை வலுவூட்டல் ஒதுக்க நிதியத்திற்கான மிகைப் பணம், திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட சேமிப்புக்களில் முதலீடு செய்ய வேண்டிய போதிலும் சங்கத்தின் நிதியத்திற்குரிய பணம் மற்றும் ஏனைய நிதியக் கணக்கின் கீழுள்ள ரூபா 56,797,110 கூட்டுத்தொகையானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திறைசேரி உண்டியல்களிலும் நிலையான வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நியதிச்சட்டத்தின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் திருத்திய நியதிச்சட்டம் | |
| (i) 19 (II) ஆம் பிரிவு | அங்கத்தவர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக முதியோர் இல்லமொன்றை நடாத்துவதற்காக முகாமைத்துவ குழுவிற்கு அதிகாரம் கிடைக்கப் பெற்றிருந்த போதும் அச்செயற்பாடு இந்த அறிக்கைத் திகதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 10 (1) ஆம் பிரிவு | அங்கத்தவர் ஒருவரின் இறப்பை அறிவித்து இரண்டு மாதங்களுக்குள் அவருக்கு உரித்தான உதவுதொகையை செலுத்த வேண்டிய போதிலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இறப்பு தொடர்பான அறிக்கையின் பிரகாரம் இறப்பினை அறிவித்து 02 மாதங்களைத் தாண்டிய 93 அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த இறப்பு உதவு தொகை ரூபா 4,180,000 ஆக இருந்தது. அந்த உதவு தொகையில் 2011 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் மரணமடைந்திருந்தவர்களுக்காக மட்டும் செலுத்தப்பட வேண்டிய இறப்பு உதவுதொகை ரூபா 2,660,000 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மரணமொன்று ஏற்பட்ட பின் சங்கத்திற்கு அறிவித்தல் அல்லது சங்கத்தினால் கண்டறியும் நடைமுறையொன்று அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக சங்கத்தின் செயற்பாட்டு விளைவுகள் (வரிக்குப் பின்னர்) தேறிய இலாபம் ரூபா 28,705,879 ஆக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் (வரிக்குப் பின்னர்) ரூபா 26,557,392 ஆனமையால் மீளாய்வாண்டிற்காக சங்கத்தின் இலாபத்தில் ரூபா 2,148,487 அதாவது 8.08 சதவீத அதிகரிப்பொன்று காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**(அ) அங்கத்துவம்**

2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டுகளில் சங்கத்தின் அங்கத்துவம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கத்துவம் | 10,897 | 10,727 | 10,664 | 10,947 | 10,982 |
| கூட்டுக : | | | | | |
| புதிய ஆட்சேர்ப்பு | 205 | 363 | 671 | 393 | 358 |
| மீண்டும் அங்கத்துவத்தைப் பெறல் | 36 | 48 | 35 | 22 | 13 |
| கழி :- | | | | | |
| அங்கத்துவத்திலிருந்து விலகல் | (411) | (474) | (423) | (380) | (262) |
| திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கத்துவம் | 10,727 | 10,664 | 10,947 | 10,982 | 11,091 |

இது தொடர்பாக பினவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10,727 ஆக இருந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 2012 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் 11091 வரை அதிகரித்திருந்தது. முன்னைய ஐந்து ஆண்டுகளில் 1,990 புதிய அங்கத்தவர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தனர். முன்னைய ஆண்டுகளில் அரச சேவைக்கு புதிதாக சேர்ந்தவர்களின் எண்ணிக்கை சில மடங்குகளினால் அதிகரித்திருந்த போதிலும், அங்கத்தவர்களை அதிகரித்துக்கொள்வதற்காக முறையான திட்டமொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) 05 ஆண்டுகளில் அங்கத்துவம் இழந்தவர்களின் மொத்தம் 1950 ஆக இருந்ததுடன் அதில் 887 அல்லது 45.49 சதவீதம் அங்கத்துவத்திலிருந்து கேட்டு விலகியிருந்தார்கள். கேட்டு விலகல் கடந்த 05 ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்திருந்தது.

**(ஆ) ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு அங்கத்தவர்களின் வருகை**

ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது சங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபைக்காக அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுகின்ற போதிலும், அக்கூட்டங்களுக்கு அங்கத்தவர்களின் வருகை மிகக்குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இதனால் சங்கத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல், ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது பிரேரணைகளை நிறைவேற்றுதல் அதிக அங்கத்தவர்களின் பிரதிநிதித்துவ அடிப்படையில் இடம்பெற்றிருக்கவில்லை. மீளாய்வாண்டிலும் கடந்த ஆறு ஆண்டுகளிலும் பொதுக்கூட்டங்களுக்கு அங்கத்தவர்களின் வருகை 12 சதவீதம் தொடக்கம் 9 சதவீதம் வரை தொடராகக் குறைவடைந்திருந்தது.

## 3.2 கடன் முகாமைத்துவத்தில் காணப்பட்ட நலிவுகள்

(அ) தெரிவுப் பரிசோதனையின் போது அங்கத்துவத்திலிருந்து விலகிய அல்லது மரணமடைந்த 9 அங்கத்தவா்களினதும் பாஸ்புத்தகங்களில் மறை மீதி ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சங்கத்தினால் அங்கத்தவர்களின் அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு பங்களிப்புப் பணம் அறவிடப்பட்டிருந்த போதிலும் அவர்களினது சம்பள ஏற்றம், சம்பளத் திருத்தங்களின் பிரகாரம் அடிப்படைச் சம்பளம் அதிகரித்திருந்த சந்தர்ப்பங்களில் அத்திருத்திய சம்பளத்தின் அடிப்படையில் பங்களிப்புப் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக சங்கத்திற்குக் கிடைக்கின்ற பங்களிப்புப் பணப் பெறுவனவுகள் குறைவடைந்திருந்தது.

(இ) பங்களிப்புப் பணம் செலுத்துவதிலிருந்து விலகியிருந்த அங்கத்தவர் ஒருவர் நிலுவைப் பங்களிப்புப் பணத்தை ஒரே தடவையில் செலுத்தியதன் பின்னர் 2012 மார்ச் மாதம் ரூபா 75,000 தொகை கணனிக் கடன் வழங்கப்பட்டிருந்தது. அந்த அங்கத்தவரின் வைப்புக் கணக்குகளில் ரூபா 10,670 தொகையான மீதி மாத்திரம் காணப்பட்டதுடன் கடன் பணத்தைப் பெற்றதன் பின்னர் அவரினால் பங்களிப்புப் பணம், கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி என்பன செலுத்தப்பட்டிருக்கவில்லை. கடன் பணத்தை அறவீடு செய்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அங்கத்தவர் ஒருவருக்கு 2012 ஆகஸ்ட் மாதம் அங்கத்தவர் கடன் ரூபா 11,610 தொகையும், சம்பளக் கடன் ரூபா 15,000 தொகையும், விழா முற்பணம் ரூபா 10,000 தொகையும், தொலைபேசிக் கடன் ரூபா 10,000 தொகையும், விசேட புத்தகக் கடன் ரூபா 10,000 தொகையும் மற்றும் கணனிக் கடன் ரூபா 75,000 தொகையும் வழங்கப்பட்டிருந்ததுடன் செப்தெம்பர் மற்றும் நவம்பர் மாதங்களின் வட்டியும் குறிப்பிட்ட மாதத்தில் அறவிடப்படாதிருந்ததுடன் நிலுவைத் தொகைகளைச் செலுத்துவதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 ஆம் ஆண்டின் போது ஆதனக் கடன் வழங்கப்பட்ட 75 அங்கத்தவர்களின் 40 கடன் கோவைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது அங்கத்தவர்களின் ஆதனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 10 மதிப்பீட்டு அறிக்கைகளில் மதிப்பீட்டைச் செய்த மதிப்பீட்டாளரின் உத்தியோகபூர்வ முத்திரை இடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2012 ஆகஸ்ட் மாதம் ஆதனக் கடன் பெற்றிருந்த அங்கத்தவரினால் போதிலும் கடன் தவணைப்பணம் செலுத்தப்பட்டிராததுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ஆதனக் கடன் வழங்கப்பட்டிருந்த 33 கோவைகள் கறையான்களினால் அழிவடைந்திருந்தன. இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) சில கோவைகள் முழுமையாக கறையான்கள் அரித்திருந்தமையினால் கோவைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அழிவடைந்த ஆதனக் கடன் கோவைகளின் உரித்துறுதிகளைத் தயாரிப்பதற்காக பணத்தினைச் செலவிடவேண்டி ஏற்படுகின்றமையினால் சங்கத்திற்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஏ) சங்கத்தினால் தாமதித்து ஆதனக் கடன் பெற்றுக்கொள்வதற்கு விருப்பமுள்ள அங்கத்தவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் 2013 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையில் 16 விண்ணப்பங்கள் காத்திருக்கும் பதிவேட்டில் காணப்பட்டது. அவ்வாறே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டின் போதும் ஆதனக் கடன் செலுத்துதல் 28 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. இவ்வாறு காத்திருக்கும் பதிவேட்டில் இருந்து கடன் பெற்றுக் கொள்வதற்கு விருப்பமானவர்களிடமிருந்து மாத்திரம் கடன் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கும், சில மாதங்கள் காத்திருக்கும் பதிவேட்டில் காத்திருக்க வேண்டியமையாலும் அங்கத்தவர்கள் அங்கத்துவத்திலிருந்து விலகுவதற்காகத் தாக்கமளித்த காரணமாக அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக இந்த சங்கத்தின் பிரதான நோக்கம் அங்கத்தவர்களின் குறுகியகால நிதித் தேவைகளுக்காக உதவிகளை வழங்கவேண்டியது என இணைச் செயலாளரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 3.3 கடை மற்றும் அலுவலக ஊழியர் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றாமை

சங்கத்தினால் தயரிக்கப்பட்டிருந்த அலுவலக நடைமுறைக் கோவையின் பிரகாரம் 2010 யூலை 21 ஆந் திகதி தொடக்கம் 02 வருடங்கள் கடந்ததன் பின்னர் கடை மற்றும் அலுவலக ஊழியர் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளில் சங்கத்தில் இருக்கின்ற சகல பதவியணியினர்களுக்கும் உரியதாக இருந்த போதிலும் பதவியணியினரில் சில உத்தியோகத்தர்கள் இந்த செயல் நடைமுறைக் கோவையின் ஏற்பாடுகளைப் பின்பற்றாமல் மேலும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உரித்தான நலன்கள் மற்றும் வரப்பிரசாதங்களை முடக்குவதற்கு இடமளித்திருந்தனர்.

### 3.4 ஒருங்கிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளில் வெற்றிடம்

சங்கத்தின் செயல்நடைமுறைக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1 , 2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஒருங்கிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகள் சங்கத்தின் பிரதான நிருவாக உத்தியோகத்தராக இருந்தது. சங்கத்தின் ஒழுங்கிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளுக்கான உத்தியோகத்தர் 2011 யூன் 01 ஆந் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டிராததுடன் உதவிச் செயலாளராக சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் அத்திகதி தொடக்கம் ஒருங்கிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளில் பதில் கடமையாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. சங்கத்தின் பிரதான நிருவாக உத்தியோத்தர் பதவி 1½ வருடத்திற்கு மேற்பட்ட காலம் வெற்றிடமாகக் காணப்பட்டது.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

சங்கத்தினால் இலங்கை வங்கியில் காப்பகமொன்று 1995 ஆம் ஆண்டு தொடக்கம் பேணப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 10,000 தொகையான வைப்பும் வைக்கப்பட்டிருந்தது. மேலும் காப்பகத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,000 தொகையான கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. தற்போது நிறுவனத்தின் சகல ஆவணங்களும் சங்கத்திற்குரிய கட்டிடத்தில் பேணப்படுகின்றமையினால் பணம் செலுத்தி பாதுகாப்பகம் ஒன்றைப் பேணுதல் தேவையற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.6 மரண உதவு தொகை நிதியம்

திருத்தம் செய்யப்பட்ட நியதிச் சட்டத்தின் 10 (அ) (ii) அ ஆம் பிரிவின் பிரகாரம் மரண உதவி அபிவிருத்தி ஒதுக்க நிதியத்தின் மிகையினை அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகளில் முதலீடு செய்வதற்காக அல்லது உறுப்பினர்களுக்கு கடன் வழங்குவதற்காக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் அந்த ஒதுக்க நிதியத்தில் மீதி ரூபா 55,195,648 ஆக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியதிச்சட்டத்தின் 10 (அ) (ii) ஆம் பிரிவின் பிரகாரம் மரண உதவு தொகை வலுவூட்டல் நிதியத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் அதாவது நிதியத்திற்குரிய பணம், அதில் முதலீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து கிடைக்கின்ற வட்டி, கடன் செலுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்ட பணம் என்பவற்றிகான வட்டி, நிருவாகச் செலவினங்களுக்காக செலுத்தப்பட்ட 1 சதவீத தொகை என்பவற்றை வெவ்வேறாக இனங்காணக்கூடிய வகையில் கணக்கு மற்றும் அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மரண நன்கொடைகளைக் கொடுப்பனவு செய்யும் போது 03 மாதங்கள் முதல் 45 ஆண்டுகள் வரையான காலதாமதம் காணப்பட்டது. 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குரிய ரூபா 1,515,100 தொகையானது மரண உதவு தொகை வலுவூட்டல் நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதனால் செலுத்த வேண்டிய மரண உதவு தொகையின் மொத்த அளவும் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.7 கணனி முறைமையின் பலவீனங்கள்

சங்கத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 05 கட்டங்களையுடைய கணனி நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரிப்பதற்காக ரூபா 970,000 தொகையான ஒப்பந்தம் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் முதலாவது கட்டத்திற்காக முன்னைய ஆண்டின் போது ரூபா 225,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் அந்த ஒப்பந்தத்தின் மற்றைய கட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அமுல்படுத்தப்பட்டிருந்த கணனி நிகழ்ச்சித்திட்டத்தில் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(அ) இறுதிக் கணக்கு தயாரிக்கக்கூடிய வகையில் நிகழ்ச்சித்திட்டம் ஸ்தாபிக்கப்பட வேண்டிய போதிலும் வழங்கப்பட்ட கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்க முடியாதிருந்தது.

(ஆ) அங்கத்தவர்கள் தொடர்பாக கணனியில் காணப்படுகின்ற தகவல்கள் சங்கத்தில் காணப்பட்ட தகவல்களுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

# 4. கணக்களிதன்மையும் நல்ல ஆளுகையும்

## 4.1 கட்டுப்பாட்டுக் குழுவின் பங்களிப்பு

சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டுக் குழுவின் பங்களிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்களுக்கான அங்கத்தவர்களின் பங்களிப்புத் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நடாத்தப்பட்டிருந்த மாதாந்த மற்றும் 18 விசேட கட்டுப்பாட்டுக் குழுக்களில் திறைசேரியினால் நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி 10 குழுக் கூட்டங்களில் மாத்திரம் சமூகமளித்திருந்ததுடன், மற்றைய பிரதிநிதி 2011 திசெம்பர் மாதத்தின் பின்னர் கேட்டு விலகியிருந்த போதிலும் அதற்காக ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குழுக்களுக்குச் சமூகமளிப்பது தொடர்பான விபரங்களின் பிகாரம் மாதாந்தக் கட்டுப்பாட்டுக் குழு மற்றும் மேலதிக கட்டுப்பாட்டு குழுக்களுக்கு நியமிக்கப்பட்ட சில அங்கத்தவர்கள் அக்குழுக்களுக்கு குறைவாகவே சமூகமளித்திருந்தனர். இதனால், சங்கத்தை வலுப்படுத்தல் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் போது, சில குழு அங்கத்தவர்களிடமிருந்து, போதியளவான பங்களிப்பு சங்கத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

### 4.2 கூட்டுத்திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் செயற்படு தன்மை

மீளாய்வாண்டிற்கான கூட்டுத்திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**உள்ளகக் கணக்காய்வு**

சங்கத்தின் உள்ளகக் கணக்காய்விற்காக போதியளவு பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டு செயற்திறனான கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு தரவுகளுக்கும் உள்ளவாறான தரவுகளுக்குமிடையே 48 விடயங்களில் 10 சதவீதம் முதல் 1787 சதவீதம் வரையான குறிப்பிடத்தக்க அளவான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தியிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சங்கத்தின் ஒருங்கிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணனி முறைமை
(ஆ) மரண நன்கொடை நடைமுறை
(இ) கட்டிட நிதியம்
(ஈ) அங்கத்துவத்தை அதிகரித்தல்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஊ) அங்கத்தவர் கடன்
(எ) நிலையான சொத்துக்கள்
(ஏ) கட்டுப்பாட்டு குழுச் செயற்பாடு